வாழ்க தமிழ்! வெல்க தமிழ்!

கற்றனைத்தூறும் அறிவு

பிப்ரவரி - 2019 விளம்பி ஆண்டு தை-மாசி மாதம்

இதழ் – 4 துளிர் – 5



# துளிர்

மாணவர்களுக்கான மாத இதழ்

## உள்ளே....

- வேதாளம் சொல்லும் கதை
- புதிர் போட்டி
- காலத்தை வென்றவர்
- மாணவர் பக்கம்

## கோப்பல் தமிழ்க் கல்வி மையம்

**இடம்: IXL Academy, 773 S MacArthur Blvd, #225 Coppell TX 75019;**
**கல்வி நாள்: ஞாயிற்றுக்கிழமை; நேரம்: 5:00 PM - 7:00PM CST**

**www.coppelltamil.com**

**connect@coppelltamil.com**

துளிர்
மாணவர்களுக்கான மாத இதழ்

# வேதாளம் சொல்லும் கதை



விஜயபுரி திரும்பிய ராமு தன் மருத்துவத் தொழிலை புனிதத் தொண்டாகக் கருதி செய்யலானான். ஓராண்டிற்குப் பிறகு, ஒரு துறவி அவன் வீட்டிற்கு வந்தார். வாயிலிலேயே நின்று உள்ளே நடப்பதை கூர்ந்து கவனித்தார். ராமு ஒரு ஏழை நோயாளியை சோதித்துக் கொண்டிருக்கையில், தடபுடலாக வந்திறங்கிய ஒரு பணக்கார ஆசாமி, "வைத்தியரே, முதலில் என்னை கவனியுங்கள் . எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறேன்" என்றார். அதற்கு ராமு சம்மதிக்கவில்லை. தொடர்ந்து ஏழை நோயாளியையே கவனித்தான். எல்லா நோயாளிகளுக்கும் பாகுபாடின்றி, சிரத்தையுடன் ராமு சிகிச்சை அளிப்பதைக் கண்ட துறவி அவனருகே வந்து, "மகனே, உன்னை பரிசோதிக்கும்படி குரு வைத்தியானந்தா என்னை இங்கே அனுப்பி வைத்தார். நீ சற்றும் சுயநலமின்றி செயல்படுகிறாய். நீ உடனே வேதாரண்யம் சென்று மந்திர ஓலைச் சுவடிகளைப் பெற்றுக் கொள். அதற்கான தகுதியை நீ அடைந்து விட்டாய் " என்று கூறினார்.

ராமு அவரிடம், "சுவாமி என்னைத் தேடி தினமும் நோயாளிகள் வந்தவண்ணம் உள்ளனர். ஒரு நாள் நான் இங்கே இல்லாமல் போனாலும் அவர்கள் அனைவரும் சிரமப்படுவார்கள். எனவே என்றாவது எனக்கு நோயாளிகளே இல்லாமல் போனால் அன்று நான் வேதாரண்யம் செல்கிறேன்" என்று கூறி அவரை நல்ல முறையில் உபசரித்து அனுப்பினான் .

ராமுவைத் தேடி நோயாளிகள் வராத நாட்களே இல்லை. இதே நிலை தொடர்ந்தால் ராமு மந்திர ஓலைச்சுவடிகளை பெறமுடியாது என்று அவன் மனைவி எண்ணினாள். கொடுமையான பல வியாதிகளை குணமாக்கும் அந்த சுவடிகளைப் பெற்றுவிட்டால் ராமு மிகச் சிறந்த மருத்துவனாவான் என்று அவள் நினைத்தாள்.

அதற்காக தனக்கு மருத்துவத்தால் குணமாக்க முடியாத தீராத வியாதி வந்துவிட்டது என்று கூறி நோய்வாய்ப்பட்டதைப் போல நடித்தாள். ராமுவும் பல முயற்சிகள் செய்து பார்த்தான். இறுதியில் வேறு வழியின்றி மந்திர ஓலைச்சுவடிகளைப் பெற வேதாரண்யம் சென்றான் .

இந்த இடத்தில் வேதாளம் கதையை நிறுத்தியது. "மன்னா, இந்த ராமுவின் சுயநலத்தை என்னவென்று சொல்வது, தனது மனைவிக்கு தேவைப்படுகிறது என்றவுடன் மந்திர ஓலைச்சுவடிகளைப் பெறச் செல்கிறான். இத்தகைய புத்தி உள்ளவனுக்கு அவற்றைக் கொடுக்கலாமா?" என்று கேட்டது .

ராமு தன் மருத்துவ சேவையை தன்னலமின்றிச் செய்து வந்தான். மனைவியின் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்றெண்ணி ஒரு கணவன் அஞ்சுவது இயல்பானது. அதில் தவறேதும் இல்லை. எனவே அவன் தகுதியை இச்செயல் குறைத்து விடாது. அவனுக்கு தாராளமாக ஓலைச்சுவடிகளைக் கொடுக்கலாம்" என்று விக்ரமாதித்தன் கூறினான். அவனது சரியான பதிலால் மௌனம் கலையவே வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது.

மீண்டும் அடுத்த இதழில் பார்க்கலாம்!!

-விஷ்வசாந்தி

துளிர்
மாணவர்களுக்கான மாத இதழ்

# நிகழ்வறிவோம்

திரு. பழநிசாமி பச்சாக்கவுண்டர் அவர்கள், 2001 ஆம் ஆண்டு டால்லஸ் நகரத்தில் மனைவியுடனும், மூத்த மகளோடும் குடியேறியபின் 2003 ஆம் ஆண்டில் தான் பிறந்து வளர்ந்த மண்ணைப் போற்றும் வகையில் கொங்கு தமிழ்ப்பள்ளியை நண்பர்களோடு ஒன்றிணைந்து நிறுவி 16 ஆண்டுகளாக நடத்தி வந்தவர்.



திரு.பழநிசாமி பச்சாக்கவுண்டர்

வயது 54

மறைவு February 22, 2019

பத்து ஆண்டுகளுக்கும் மேலாக, சாஸ்தா தமிழ் அறக்கட்டளை நடத்தும் திருக்குறள் மற்றும் தமிழ்திறனறியும் போட்டிகளில் தலைமைப் பொறுப்பேற்று வழிநடத்தியவர். மேலும் மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச்சங்கம் மற்றும் பல்வேறு தமிழ் அமைப்புகளில் தமிழ் இலக்கிய, பண்பாட்டு நிகழ்வுகளில் தனக்கே உரிய சிறப்புத்தன்மையுடன் செயலாற்றியவர்.

தன்னலம் பாராது தமிழ்நலம் போற்றித் திகழ்ந்த திரு. பழநிசாமி பச்சாக்கவுண்டர் பிப்ரவரி 22 ஆம் தியதி அன்று மாலை 4 மணியளவில் மாரடைப்பினால் இயற்கை எய்தினார்.

டல்லாஸ் நகரில் நடைபெற்ற எந்த தமிழ் நிகழ்ச்சியாயினும், முன்னின்று தன்னால் இயன்ற உதவிகளைச் செய்தவர் திரு. பழநிசாமி பச்சாக்கவுண்டர். ஈடுசெய்ய முடியாத அவரது இந்த இழப்பு, அவரது குடும்பத்திற்கு மட்டுமின்றி, டல்லாஸ் வாழ் தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகும்.

கோப்பல் தமிழ்க் கல்வி மையம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

**கோப்பல் தமிழ்க் கல்வி மையத்திற்கு உதவ ஒரு எளிய வாய்ப்பு**



**நீங்கள் அமேசானில் வாங்க விரும்பும் அதே பொருளை , அதே விலையில் https://smile.amazon.com இணையதளம் மூலம் பெறுங்கள். "DFW Tamil Foundation" என்று *smile.amazon.com* இணையதளத்தில் தேடுங்கள். செந்தமிழ் பணிக்கான உங்கள் ஆதரவைத் தொடங்குங்கள்.**

amazon.com Smile
You shop. Amazon gives.

# காலத்தை வென்றவர்


“இசைஞானி” இளையராஜா

'இராசையா' என்ற இயற்பெயருடைய இசைஞானி இளையராஜா 1943 ஆம் ஆண்டு தேனி மாவட்டத்தில் உள்ள பண்ணைப்புரம் என்ற ஊரில் பிறந்தார். ஒரு சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்த இவர், உலகின் தலைசிறந்த இசைக்கலைஞர்களில் ஒருவராக ஆனதற்கு அவரது கடும் உழைப்பும், திறமையுமே காரணம். சுமார் 1000 திரைப்படங்களுக்கு மேல் பின்னணி இசை மற்றும் 7000 பாடல்களுக்கு மேல் மெட்டமைத்து உருவாக்கியும் உள்ளார். சிம்பொனி இசையமைத்த முதல் ஆசியர் இவரே. இலண்டன் டிரினிட்டி கல்லூரியில் கிட்டார் வாசிப்பதில் தங்கப் பதக்கம் பெற்றிருக்கிறார். ஐந்து தேசிய விருதுகள், பத்மபூஷன், பத்மவிபூஷன், சங்கீத நாடக சபா விருது எனப் பல உயரிய விருதுகளைப் பெற்ற இளையராஜாவிற்கு, அமெரிக்காவின் சினிமா இதழான 'டேஸ்ட் ஆப் சினிமா', உலகின் தலைசிறந்த 25 இசைமேதைகளின் பட்டியலில் ஒன்பதாவது இடத்தை அளித்து கௌரவப்படுத்தியுள்ளது. தரணியே புகழும் இந்த 75 வயது இளைஞர் ஓய்வின்றி இன்றும் புது ராகங்களை உருவாக்கி வருகிறார்.

# குறளும் அதன் பொருளும்



நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை


**மு.வ உரை:**
நிலையில்லாதவைகளை நிலையானவை என்று மயங்கி உணரும் புல்லறிவு உடையவராக இருத்தல் வாழ்க்கையில் இழிந்த நிலையாகும்.

**சாலமன் பாப்பையா உரை:**
நிலை இல்லாத பொருள்களை நிலையானவை என்று எண்ணும் அற்ப அழிவு இழிவானது.

**கலைஞர் உரை:**
நிலையற்றவைகளை நிலையானவை என நம்புகின்ற அறியாமை மிக இழிவானதாகும்

# புதிரோடு விளையாடு

## மழலை நிலை



## நிலை 3 முதல் நிலை 4 வரை

1) க மை ட ங் தி ழ கி
2) லா ம் சா க ர ச்
3) ள் க தொ ம கை க்

## நிலை 5 முதல் நிலை 8 வரை

நீங்கள் ஏழு தங்கக் கட்டிகளை வைத்துள்ளீர்கள். அதில் ஒன்று போலியானது; மற்றவற்றைவிட எடை குறைவானதும் கூட. உங்களிடம் தராசு ஒன்று உள்ளது; ஆனால் அதை இருமுறைதான் பயன்படுத்த முடியும்.

போலியான தங்கத்தை எவ்வாறு கண்டுபிடிப்பீர்கள்?

## விடுகதை

நடந்தவன் நின்றான்..
தலையைச் சீவினேன்..
மறுபடியும் நடந்தான் .
அவன் யார் ?

கொதிக்கும் கிணற்றில் குதிப்பான்..
குண்டாகி மீண்டு வருவான்..
அவன் யார் ?

## சென்ற இதழ் விடுகதைகளுக்கான விடைகள்

1 .வெண்ணிலா
2 .வானவெடி

அனைத்து நிலை மாணவர்களும் தங்கள் விடைகளை அனுப்ப
https://goo.gl/forms/V3auuWs036nJ626u2

## கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன

**பெற்றோர்களும் மாணவர்களும் தங்கள் படைப்புகளை அனுப்பித் துளிரில் பங்களிக்க முடியும். உங்கள் கட்டுரைகளை newsletter@coppelltamil.com என்கிற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள். இதழில் வரும் கட்டுரைகளின் படைப்பாளிகள் ஆண்டு விழாவில் கௌரவிக்கப் படுவார்கள்.**

# தோழா தோழி





தோழி வந்தது கூட தெரியாமல் தோழன் மின்கம்பிகளை வைத்து ஏதோ ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தான்.

என்ன தோழா செய்துகொண்டிருக்கிறாய் ?

அடுத்த மாதம் நம் பள்ளியில் அறிவியல் கண்காட்சி நடைபெறப் போகிறது அல்லவா? அதற்காக ஒரு சோதனை முயற்சியை செய்து கொண்டிருக்கிறேன் .

எதற்காக இவ்வளவு சிரமப்படுகிறாய்? இணையதளத்தைப் பார்த்து எதையாவது செய்து விட வேண்டியது தானே !

தோழி நம் மனித மூளையின் சக்தி அபாரமானது. அதைப் பயன்படுத்தி எண்ணற்ற விஷயங்களை நாமே கண்டுபிடிக்கலாம் .அதை விடுத்து யாரோ கண்டறிந்து சொன்னதை செய்து நம்மை நாமே ஏன் குறைத்து மதிப்பிட்டுக் கொள்ள வேண்டும்?

ஆமாம் தோழா நான் இதை யோசிக்கவே இல்லை பாரேன்.

நீ மட்டுமில்லை தோழி , இன்றைக்குப் பலரும் தங்கள் அறிவை உபயோகிப்பதே இல்லை. இணையத்தையே நம்பி வாழ்கின்றனர். இந்நிலை தொடர்ந்தால் நாளடைவில் மனிதன் சிந்திக்கும் ஆற்றலையே இழந்து விடுவான்.

நீ சொல்வது சரி தான். நானும் புதிதாக ஏதாவது முயற்சிக்கிறேன். அது தான் நல்லது.

அசத்து தோழி ! -

- விஷ்வசாந்தி

# மாணவர் பக்கம்

மெட்ரோப்ளக்ஸ் தமிழ்ச் சங்கத்தின் 2019 ஆம் ஆண்டு பொங்கல் திருநாள் சிறப்பு நிகழ்ச்சிகள் டல்லாஸ் நகரில் கோலாகலமாக நடைபெற்றன. கோப்பல் தமிழ்ப் பள்ளியின் சார்பில் மாணவர்கள் நமது இந்திய மண்ணின் அடையாளமான விவசாயத்தின் மகத்துவத்தை இளம் தலைமுறையினர் உணரும் வகையில் 'உசுரு' என்னும் நாடகமாக அரங்கேற்றிக் காட்டினர்.பலரின் பாராட்டுகளையும் கைத்தட்டல்களையும் பரிசாகப் பெற்றனர்.

மாணவர்களை தயார்படுத்தும் பணியில் உதவிய ஆசிரியர்களுக்கும், தன்னார்வலர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

துளிர்
மாணவர்களுக்கான மாத இதழ்

# மாணவர் பக்கம்




கோப்பல் தமிழ்ப் பள்ளி
பதாகையுடன் மாணவர்கள்

**நாடகத்தில் சிறப்பாக பங்கேற்ற மாணவர்கள்:**

நம்யுக்தா நிலை 6
லியா நிலை 5
ரேயான் நிலை 5
பிரணவ் நிலை 5
சர்வேஷ்வர் நிலை 5
நிகிலேஷ்வர் நிலை 2



